# பாலகன் பிறந்தார்



**ஏசாயா 9:6** கூறுகிறது, **"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். "**, மேற்க்கண்ட வசனத்தின் மூலம் நாம் ஆண்டவரின் பல்வேறு தன்மைகளை அறிந்து கொள்கிறோம். அவ்வொன்றையும் சுருக்கமாய் இப்பொழுது தியானிப்போம்.

## 1. கர்த்தத்துவம்:

ஆம், வானமும், பூமியும் சகலமும் அவரால் சிருஷ்டிக்கப்பட்டு அவரால் ஆளப்படுகிறது. **கொலோசெயர் 1:15,16** வசனங்கள் கூறுகிறது **"அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது."**, எனவே நாம் அவருடைய ஆளுகைக்குள் வாழுகிறபடியால், நமக்கு வேண்டிய அனைத்தையும் அவர் தர வல்லவர். நாம் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று அவர் நம்மை ஆளும்படியாய், அவருடைய கர்த்தத்துவத்திற்குள் நம்மை அர்பணிக்க வேண்டும்.

## 2. அதிசயமானவர்:

ஆம், அவர் அதிசயமானவர். தம்மை நம்பினோரின் வாழ்க்கையில் அதிசயங்களை செய்கிறவர். பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களின் காலத்திலும், புதிய ஏற்பாட்டின் காலத்திலும், இன்றும், என்றும் அவர் அதிசயங்களை செய்கிறவர். அவரை நம்பின ஒருவரும் வெட்கப்பட்டு போவதில்லை.

**3. ஆலோசனைக்கர்த்தா:**

ஆம், நம்மை போதித்து (ஆலோசனை கூறி) வழி இதுவே இதில் நடவுங்கள் என்று வழி நடத்துகிறவர். அவர் வழியின் முடிவு நித்திய ஜீவ கரை **(வெளி 7:17)**. அவர் வழியில் இருள் இல்லை, அவரே வெளிச்சமாக இருக்கிறார். அவரின் சிந்தையை நம்மில் செலுத்தி, நாம் நடக்க வேண்டிய, பிறரை நடத்த வேண்டிய பாதையை காண்ப்பிக்கிறார்.

**4. வல்லமையுள்ள தேவன்:**

ஆம், அன்று செங்கடலை பிளந்து தம் வல்லமையை வெளிப்படுத்தினவர், இன்று அவரை சார்ந்து கொள்ளும் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் வல்லமையான காரியங்களை செய்கிறார். அவரே நம் பெலனாய் இருந்து, சத்துருவை ஜெயிக்க பெலன் தருகிறார். நம் வாழ்வின் எத்தடைகளையும் அகற்றி நம்மை நடத்தி செல்ல வல்லமையுள்ளவர். பாவ, சாப கோர பிடியில் இருந்து நம்மை மீட்டெடுப்பவரும் அவரே.

**5. நித்திய பிதா:**

ஆம், அவர் என்றென்றும் இருக்கிறவர். என்றென்றும் நம்மையும் தம்மோடு இருக்க செய்கிறவர். எக்காலத்திற்கும் உரியவர். நம்மை முற்றும் முடிய இரட்சிக்க வல்லமையுள்ளவரும் அவரே.

**6. சமாதானப் பிரபு:**

நம் வாழ்வில், சமுதாயத்தில், தேசத்தில், இவ்வுலகத்தில், அண்ட சராசரம் எங்கும் சமாதானம் இருக்க கட்டளையிட கூடியவர். அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும், யாவும்.

இவரே நம் பெருமான். எனவே நமக்காக இம்மண்ணுலகில் வந்துதித்த அவரையே சார்ந்து கொள்வோம். கிறிஸ்துவை ஒவ்வொருவர் இதயத்திலும் பிறக்க செய்வோம். **"ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளி 22:20)**. மாரநாதா.